
# திராவிடத்தால் வாழ்கிறோம்

858

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

7

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!**

## சமச்சீர் கல்வி : கல்வி உரிமையை நிலைநாட்டிய கலைஞர்!

*‘எல்லார்க்கும் எல்லாம்’ என நம் கழக அரசு அனைத்து மக்களுக்குமான உரிமைகளைப் பேசிக் கொண்டிருக்கிறது. எந்தக் காலக்கட்டத்திலும் கல்வியில் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதுதான், கழக அரசின் கொள்கை முடிவு என்பதைத்தான், அன்று சமச்சீர் கல்வியை அமல்படுத்தும்போதும் நிலைநாட்டினார் தமிழ்நாட்டின் காவலர் முத்தமிழறிஞர் கலைஞர்.*

2010-ஆம் ஆண்டு சமச்சீர் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வந்தது, முத்தமிழறிஞர் கலைஞர் அரசு. அந்த ஆண்டு, 1 மற்றும் 6-ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கொண்டு வரப்பட்ட புதிய பாடங்கள் மாணவர்களின் எதிர்கால இலக்குகளுக்கு ஏற்ப வடிவமைக்கபட்டு இருப்பதாகக் கல்வியாளர்கள் கருத்துகளைப் பகிர்ந்து வந்தனர். குறிப்பாக, அடுத்த 20 ஆண்டுகளில் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப பாடத்திட்டங்களைக் கல்வியாளர்கள் குழு தயாரித்திருந்தது.

இந்த நிலையில், 2011-2012-ஆம் கல்வி ஆண்டு முதல் சமச்சீர் கல்வி முறையை, மேலும் தொடர்வதற்கு ஏதுவாக, அரசின் கொள்கை முடிவுப்படி, 2, 3, 4, 5, 7, 8, 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்கள் 200 கோடி ரூபாய் செலவில், அச்சிடப்பட்டு, மாவட்டங்களுக்கு அனுப்பப் பட்டிருந்தன. அதாவது, சமச்சீர் கல்வி தொடங்கப்பட்டு, ஓராண்டு கற்ற நிலையில், இதர வகுப்புகளுக்கான புதிய பாடங்களும் பள்ளிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தன.

### ஆட்சி மாற்றமும் காட்சி மாற்றமும்

இந்த நிலையில் 2011-ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு, அம்மையார் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார். 22.05.2011 அன்று புதிய அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கிடப்பில் போடப்போவதாக அறிவித்தார் அம்மையார். ‘சமச்சீர்க் கல்வித்திட்டப் பாடங்கள் தரமற்றவை; அதுபற்றி ஆராய புதிய வல்லுநர் குழு அமைக்கப்படும். அதுவரை சமச்சீர் கல்வி முறை நிறுத்தப்பட்டு, பழைய முறைப்படியே பாடநூல்கள் வழங்கப்படும்’ என அரசு முடிவு செய்துள்ளதாக அறிவித்ததுடன், சட்டமன்றத்திலும் அதற்கேற்ப சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வந்தார்.

சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்துத் தயார் செய்யப்பட்ட புதிய சமச்சீர்த் திட்டப் பாடப்புத்தகங்களை விநியோகம் செய்யக்கூடாது என்றும், அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்தார். தவிர, பழைய பாடத்திட்டப் புத்தகங்களை மீண்டும், 200 கோடி ரூபாய் செலவழித்து, புதிதாக அவசர அவசரமாகத் தயாரிக்கவும் திட்டமிட்டார். இந்தப் போக்கினை, தமிழ்நாட்டுக் கல்வியாளர்கள் கண்டித்தனர். கலைஞர் காட்டமான அறிக்கை ஒன்றை வெளியிட்டு, பல தரவுகளை மக்கள் மன்றத்தில் முன்வைத்தார்.

கோவையில் நடைபெற்ற, ‘உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு’க்காக கலைஞர் தொகுத்து எழுதிய வாழ்த்துப் பாடல் சமச்சீர் பாடநூல்களில் இடம்பெற்றது. அதைக் குறிப்பிட்ட கலைஞர், அந்தப் பாடலில் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கம்பர், அவ்வை என்றெல்லாம் அனைத்து இலக்கியங்களையும், இலக்கிய கர்த்தாக்களையும் பாகுபாடு பாராமல் இணைத்து எழுதிய பாடல் சமச்சீர் கல்விப் பாடப்புத்தகங்களிலே இடம் பெற்றுள்ளதுதான் அரசின் இந்த முடிவுக்குக் காரணமா? ஆம், என்றால் அந்தப் பாடல் நான் தொகுத்து எழுதியது என்பதையே எடுத்துவிடலாம் அல்லது அந்தப் பாடலையே முழுமையாக எடுத்து விடலாம். அதற்காக சமச்சீர் கல்விக்கான புத்தகத்தை வெளியிடுவதில் தவறு ஒன்றுமில்லையே? எனக் காட்டமாக அறிக்கை விட்டிருந்தார். கலைஞரின் அறச்சீற்றம், உயர்நீதிமன்றத்தில் சட்டப் போராட்டமாக நம் வழக்கறிஞர்களால் கொண்டு செல்லப்பட்டது.

புதிய அரசின் முடிவை எதிர்த்து, பெற்றோர் மற்றும் கல்வியாளர்கள் சார்பில், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்குகளில் கழகம் இணைத்துக் கொண்டு வாதங்களை முன்வைத்தது. அதன் காரணமாக, சென்னை உயர்நீதிமன்ற அமர்வு, சமச்சீர் கல்வி ரத்து சட்டத்திருத்தத்திற்கு இடைக்கால தடை விதித்தது.

சென்னை, உயர்நீதிமன்றத்தில் தொடரப் பட்ட வழக்கில் ஜூன் 10, 2011 அன்று தீர்ப்பு கூறப்பட்டது. அந்தத் தீர்ப்பு வந்த அடுத்த இரண்டு நாட்களிலேயே, 13 ஜூன், 2011 அன்று உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியது தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், எதிர்த்தரப்பாகத் தங்களையும் விசாரிக்கக் கோரி கல்வியாளர்கள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் 1 மற்றும் 6-ஆம் வகுப்புகளுக்கு சமச்சீர் கல்வியைத் தொடரச் சொன்ன உச்சநீதிமன்றம், இதர வகுப்புகளுக்கு சமச்சீர் கல்வியைத் தொடர்வதற்கு நிபுணர்குழு அமைக்குமாறு அரசுக்கு உத்தரவிட்டது. அதன்படி, அம்மையார் அமைத்த நிபுணர்குழு சமச்சீர் பாடநூல்கள் தரமற்றவை என அரசுக்கு அறிக்கை அளித்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தார் அம்மையார் ஜெயலலிதா.

### உச்சநீதி மன்றம் வைத்த குட்டு

இதற்கிடையே உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கில், ஜூலை 18, 2011 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பில், சமச்சீர் கல்வியைச் செயல்படுத்துமாறு ஆணையிட்டதுடன், தமிழ்நாடு அரசின் சட்டத் திருத்தம் செல்லாது எனவும் அறிவித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் தமிழக அரசு ஜூலை 19, 2011 அன்று மேல்முறையீட்டுக்குச் சென்றது. இந்த வழக்கில் தமிழ்நாடு அரசுக்குக் கண்டனம் தெரிவித்த நீதிபதிகள், சமச்சீர் கல்வியை நடப்புக் கல்வியாண்டிலேயே செயல்படுத்த வேண்டும் என உத்தரவிட்டனர். குறிப்பாக, ஆகஸ்ட் 2-ஆம் தேதிக்குள் மாணவர்களுக்குப் பாட நூல்களைத் தரவேண்டும் என்றது. ஆனால், அரசு கூடுதல் அவகாசம் கேட்டுக் கொண்டதன் பேரில், சமச்சீர் கல்விப் பாடநூல்களைத் தருவதற்கு, ஆகஸ்ட் 10-ஆம் தேதி இறுதி நாளாக்கப்பட்டது.

ஆகஸ்ட் 4-ஆம் தேதியுடன் இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களும் முடிவடைந்த நிலையில், இறுதித் தீர்ப்பினை உச்சநீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து. ஆனால், இறுதித் தீர்ப்பு 2011, ஆகஸ்ட் 9 அன்று வழங்கப்பட்டது. நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், “சமச்சீர் கல்வி வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், தலையிட முடியாது என்றும் சமச்சீர் கல்வி முறையை 10 நாட்களுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்” என்றும் தீர்ப்பளித்தனர். இந்த வழக்கில், 25 காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியுள்ளதாக நீதிபதிகள் குறிப்பிட்டனர். குறிப்பாக, அம்மையார் அரசு தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவையும் நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். அதனைத் தொடர்ந்து சமச்சீர் பாடநூல்கள் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் வழங்கப்பட்டு, பாடத்திட்டம் அமலுக்கு வந்தது.


தி.மு.கழக அரசு அல்லது கலைஞர் கொண்டு வந்த திட்டம் என்பதால், அதை எதிர்க்க வேண்டும் என்கிற ஒரே நோக்கம்தான் சமச்சீர் கல்வித் திட்டத்தில் அம்மையார் அரசுக்கு இருந்தது. ஆனால், சமச்சீர் கல்வி என்பது மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கச் செய்து, எதிர்கால கல்வித் திட்டங்களுக்கு ஏற்ப, மாணவர்களை மேம்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கம்தான் கலைஞரிடம் இருந்தது. அந்த வழக்கில் வெற்றிபெற்று, நமது நாடாளுமன்ற எம்.பி வில்சன் வந்தபோது, கலைஞர் பெருமையுடன் ‘வாய்யா வில்சன்’ என்று அழைத்தார். அன்று கலைஞர் ஒரு நெருக்கடியான நேரத்தில் இருந்தார். ஆனால், சமச்சீர் கல்வி வழக்கின் வெற்றி, அவர் சோர்வுகளையெல்லாம் போக்கியது.

...தொடரும்



> **“எதிர்கால கல்வித் திட்டங்களுக்கு ஏற்ப, மாணவர்களை மேம்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கம்தான் கலைஞரிடம் இருந்தது.”**

## ‘குடிஅரசு’: ஒரு முத்துக் குளியல்!



ஒரு நூற்றாண்டில் தமிழ்நாடு கண்ட வளர்ச்சிக்கான அடித்தளத்தை ஆராய முனைவோருக்கான அதிமுக்கிய ஆதாரம், தந்தை பெரியாரால் தொடங்கப்பட்ட ‘குடிஅரசு’ இதழ். 1925-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1949-ஆம் ஆண்டு வரை 25 ஆண்டுகள் வார இதழாக வெளி வந்தது ‘குடிஅரசு’ இதழ். அதிலிருந்து பெரியாரின் எழுத்துக்கள், பேச்சுக்கள், தலையங்கங்கள் ஏற்கெனவே நூல்களாக வெளிவந்துவிட்டன.

எனினும், 25 ஆண்டு கால இதழ்களை முழுமையாக வாசிப்பது, அனைவருக்கும் சாத்தியப்படாதது. அந்த வகையில், 25 ஆண்டு கால இதழின் தோற்றம், உள்ளடக்கம், ஆதரவு-எதிர்ப்பு, உருமாற்றம், கண்டனங்கள், நிலைப்பாடுகள், பிரச்சார வீச்சு, அடக்குமுறைகள் என அறியப்படாத, அறிந்துகொள்ள வேண்டிய பல செய்திகளை ‘நூற்றாண்டு கண்ட குடிஅரசு: ஒரு முத்துக்குளியல்’ என 240 பக்கங்களில் நூலாகத் தொகுத்துத் தந்துள்ளார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி.

‘குடிஅரசு’ இதழின் தொடக்கக் கால வடிவமைப்பு, பெரியார் ஜாதிப் பட்டத்தை எப்போது துறந்தார்?, ‘குடிஅரசு’ இதழில் எழுதியவர்கள், ‘குடிஅரசு’ இதழில் பதிவான மாநாடுகள், ‘குடிஅரசு’ இதழில் பாராட்டி எழுதப்பட்ட பிற திராவிட இயக்க ஏடுகள், தமிழ்நாடு மட்டுமின்றி, சிங்கப்பூர், கிளாங், பினாங்கு, ஈப்போ, செரம்பான், ஜோகூர்பாரு, கோலாலம்பூர், கொழும்பு என உலகின் பல்வேறு நகரங்களில் ‘குடிஅரசு’ இதழுக்கான முகவர்கள் இருந்தது என அரிய தகவல்கள் பலவற்றைத் திரட்டி, வாசகர்கள் எளிமையாக அறிந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார் ஆசிரியர் கி.வீரமணி.

‘குடிஅரசு’ இதழை ஆய்வு செய்வோருக்கும், வாசிக்க விரும்புவோருக்கும் வழிகாட்டும் விதமாக அமைந்துள்ள இந்நூல் சென்னை, வேப்பேரியில் உள்ள பெரியார் திடலிலும், திருச்சி, புத்தூரில் உள்ள பெரியார் மாளிகையிலும் விற்பனைக்குக் கிடைக்கிறது. விலை - ரூ.250/.

## ஃப்ளாஷ்பேக்



## தலைவர் வழங்கிய இனிப்பு!



ஆலவயல் முரளிசுப்பையா

1996-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 18-ஆம் தேதி, அன்று புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதியில் திருமயம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எனது தந்தை ஆலவயல் சுப்பையா அவர்களின் இல்லத் திருமண விழா முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் தலைவர் அவர்கள் “சாதி, மத சார்பற்ற சமுதாயம் காண்பதே பெரியார் - அண்ணா வழிவந்த கழகத்தின் குறிக்கோள்” என உரையாற்றினார்கள். எனது தந்தை என்னை தலைவர் அவர்களிடத்தில் அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தினார். கழகத் தலைவர் அவர்கள் எனக்கு இனிப்பு வழங்கி அனுப்பி வைத்தார்கள். என் அறியாத வயதில், நான் அறிந்த தலைவர், வாழ்க அவரது புகழ்! உடன் தலைமைக் கழக நிர்வாகிகள் ஆற்காடு வீராசாமி, அண்ணன் துரைமுருகன், மாவட்ட செயலாளர் பெரியண்ணன் உள்ளிட்ட முன்னணியினர் உடன் இருந்தனர்.

**- ஆலவயல் முரளிசுப்பையா எம்.சி.ஏ., பொன்னமராவதி, புதுக்கோட்டை தெற்கு**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நல்வருக

### அறப்போரில் ஐவர் அணி!

1963-ஆம் ஆண்டு அக்டோபரில் கழகம் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டில், 17-11-1963 முதல் மாவட்ட வாரியாக, இந்தி எதிர்ப்பு அறப்போர்த் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அறிவித்தார். ‘1965-ஆம் ஆண்டு ஜனவரி வரை தொடர்ந்து அறப்போர் நடைபெறும்’ என்றும் தெரிவித்தார். சட்ட நகல் எரிப்புப் போரிலும், மறியல் போரிலும் ஈடுபடுகிற ஒவ்வொரு அணியும் ஐந்து பேர்களைக் கொண்டதாக இருக்கும் என்றும் இதற்கு, ‘ஐவர் அணி’ என்று பெயரிடப்படும் என்றும் அறிவித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131